திருவள்ளுவராண்டு 2057, துலை (ஐப்பசி) 27
ந.க.எண் 965/2026, நாள்: 13.11.2026

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்
சென்னை – 600 028

செய்திக் குறிப்பு

சொற்களின் வளமே மொழியின் நலம். அகராதிகளே சொற்களின் ஆவணக்காப்பகமாக விளங்குகின்ற என்பதை உணர்ந்து செயலாற்றிவரும் அகராதியியல் அறிஞர்கள், படைப்பாளர்களைப் பாராட்டி ஊக்குவிக்கும் வகையில், தமிழ்நாடு அரசு செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம் வழியாகப் பல்வேறு விருதுளையும் பரிசுகளையும் வழங்கிச் சிறப்புசேர்த்துவருகிறது.

அவ்வகையியல் நடப்பு 2026ஆம் ஆண்டிற்கான 5 வகையான விருதுகள் மற்றும் தூயதமிழ்ப்பற்றாளர் பரிசுக்குத் தகுநிறை தமிழறிஞர் பெருமக்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்பெறுகின்றன.

விருதுகளின் அணிவரிசை :

விருது	நபர்	விருது விவரம்
1. தேவநேயப் பாவாணர் விருது	1	ரூ. 2.00 இலட்சம், ஒரு சவரன் தங்கப் பதக்கம், தகுதியுரை
2. வீரமாமுனிவர் விருது	1	ரூ. 2.00 இலட்சம், ஒரு சவரன் தங்கப் பதக்கம், தகுதியுரை
3. தூயதமிழ் ஊடக விருது (அச்சு ஊடகம், காட்சி ஊடகம்)	2	ரூ. 50ஆயிரம், தங்கப்பதக்கம் (ரூ.25ஆயிரம் மதிப்பில்), தகுதியுரை
4. நற்றமிழ்ப் பாவலர் விருது (மரபுக்கவிதை, புதுக்கவிதை)	2	ரூ. 50ஆயிரம், தங்கப்பதக்கம் (ரூ.25ஆயிரம் மதிப்பில்), தகுதியுரை
5. தூயதமிழ்ப் பற்றாளர் விருது	38	ரூ.20ஆயிரம், பாராட்டுச்சான்றிதழ்
பரிசு		
6. தூயதமிழ்ப் பற்றாளர் பரிசு	3	ரூ.5ஆயிரம், பாராட்டுச் சான்றிதழ்

விருதுபெறுவதற்குத் தகுதிவாய்ந்த தமிழறிஞர்கள் http://sorkuvai.tn.gov.in அல்லது http://awards.tn.gov.in என்ற இணையத்தளம் வழியாக **11.12.2026ஆம் நாள் மாலை 5மணிக்குள்** விண்ணப்பிக்கவேண்டும்.

கூடுதல் விவரமறிய விரும்புவோர் 044- 29520509 என்ற எண்ணில் அலுவலக நேரத்தில் தொடர்புகொள்ளலாம். உரிய நாளுக்குள் (11.12.2026) வரப்பெறும் விண்ணப்பங்களே ஏற்றுக்கொள்ளப்பெறும் என்பதனை அறிஞர்பெருமக்கள் நினைவிற்கொள்ள அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

இயக்குநர் மு.கூ.பொ.

செ.சொ.அ.தி.இ.

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்

2026ஆம் ஆண்டிற்கான விருதுகள்– தகுதிகள், வரையறைகள்

1. தேவநேயப் பாவாணர் விருது

தமிழ் வேர்ச்சொல் ஆய்வு, அகராதி உருவாக்குதல் மற்றும் தனித்தமிழைப் பின்பற்றுதல் உள்ளிட்ட ஆய்வும் தமிழ்மொழிமீது ஈடுபாடும் கொண்டு பணியாற்றுகிற, அகராதியியல் துறையில் சிறந்து விளங்குகிற தகுதிவாய்ந்த உள்நாட்டு அறிஞர் ஒருவருக்கு ஆண்டுதோறும் தேவநேயப் பாவாணர் விருது வழங்கப்பெறும். இவ்விருது 2020ஆம் ஆண்டுமுதல் வழங்கப்பெற்றுவருகிறது.

விருதுத்தொகை ரூ. 2.00 இலட்சம், ஒரு சவரன் தங்கப்பதக்கம், தகுதியுரை

2. வீரமாமுனிவர் விருது

வீரமாமுனிவர் நெறியில் அவர்தம் படைப்பு நடையில் சிற்றிலக்கியங்கள், மொழிபெயர்ப்புகள் உருவாக்கி, தமிழ் அகராதித்துறையில் சிறந்து விளங்கி, தமிழ் அகராதிகளையும் வெளியிட்டுள்ள, தமிழைத் தாய்மொழியாகக் கொள்ளாத பிறப்பால் வெளிநாட்டைச் சார்ந்த தகுதிவாய்ந்த அகராதியியல் அறிஞர்கள், வெளிநாடுவாழ் அகராதியியல் அறிஞர்கள், இந்தியாவின் பிற மாநிலங்களில் வாழும் அகராதியியல் அறிஞர்கள், தமிழ்நாட்டிலுள்ள அகராதியியல் அறிஞர்களுள் ஒருவருக்கு ஆண்டுதோறும் வீரமாமுனிவர் விருது வழங்கப்பெறும். இவ்விருது 2020ஆம் ஆண்டுமுதல் வழங்கப்பெற்றுவருகிறது.

விருதுத்தொகை ரூ. 2.00 இலட்சம், ஒரு சவரன் தங்கப்பதக்கம், தகுதியுரை

3 நற்றமிழ்ப் பாவலர் விருது

தங்களின் கவிதைப் படைப்புகளில் (மரபுக்கவிதை, புதுக்கவிதை) பிறமொழிக் கலப்பில்லாத தூயதமிழ்ச் சொற்களையும் புதிய தமிழ்க் கலைச்சொற்களையும் பயன்படுத்தி மொழிக்குப் புத்துயிரும் புதுமலர்ச்சியையும் ஏற்படுத்தும் இரண்டு பாவலர்களுக்கு ஆண்டுதோறும் நற்றமிழ்ப் பாவலர் விருது வழங்கப்பெறும்.

இவ்விருது 2020ஆம் ஆண்டுமுதல் வழங்கப்பெற்றுவருகிறது.

விருதுத்தொகை ரூ. 50ஆயிரம், தங்கப்பதக்கம் (ரூ. 25ஆயிரம் மதிப்பில்), தகுதியுரை

4. தூயதமிழ் ஊடக விருது

பிறமொழிக் கலப்பின்றித் தூயதமிழைப் பயன்படுத்தி ஊடகப் பணியாற்றிவருகிற, அச்சு ஊடகம் மற்றும் காட்சி ஊடகம் (தொலைக்காட்சி மற்றும் வலையொளி) என இரண்டு ஊடகங்களுக்கு ஆண்டுதோறும் தூயதமிழ் ஊடக விருது வழங்கப்பெறும். இவ்விருது 2020ஆம் ஆண்டுமுதல் வழங்கப்பெற்றுவருகிறது.

விருதுத்தொகை ரூ. 50ஆயிரம், தங்கப்பதக்கம் (ரூ. 25ஆயிரம் மதிப்பில்), தகுதியுரை

5. தூயதமிழ்ப் பற்றாளர் விருது

நடைமுறை வாழ்க்கையிலும், பேச்சுவழக்கிலும் பிறமொழிக் கலப்பில்லாமல், தூயதமிழையே பயன்படுத்துவோரிலிருந்து மாவட்டத்திற்கு ஒருவர் வீதம் மொத்தம் 38 பேருக்குத் தூயதமிழ்ப் பற்றாளர் விருது வழங்கப்பெறும்.

இவ்விருது 2020ஆம் ஆண்டுமுதல் வழங்கப்பெற்றுவருகிறது.

விருதுத்தொகை ரூ.20ஆயிரம், பாராட்டுச்சான்றிதழ்

6. தூயதமிழ்ப் பற்றாளர் பரிசு

நடைமுறை வாழ்க்கையிலும் பேச்சுவழக்கிலும் பிறமொழிக் கலப்பில்லாமல், தூயதமிழையே பயன்படுத்துவோரிலிருந்து மாநில அளவில் தேர்வுசெய்யப்பெறும் மூன்றுபேருக்குத் தூயதமிழ்ப் பற்றாளர் பரிசு வழங்கப்பெறும். இப்பரிசு 2019ஆம் ஆண்டுமுதல் வழங்கப்பெற்றுவருகிறது.

பரிசுத்தொகை ரூ.5ஆயிரம், பாராட்டுச்சான்றிதழ்

இயக்குநர் மு.கூ.பொ.

செ.சொ.அ.தி.இ.